3. கவன ஈர்ப்பு

டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் வான்வழி செல்லும் கம்பிகளைப் புதைவடமாக மாற்றுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, சத்தியா நகர் மற்றும் எம்.ஜி.ஆர். நகர் 10-வது வட்டத்தில் உயர் மின்னழுத்த கம்பிவடம்..

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன காலையிலேயே வெளிநடப்பா? கொடுமையாக இருக்கிறது.

திரு. பி.கே. சேகர்பாபு: தரைக்கு மேலே செல்வதால் அடிக்கடி விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க பூமிக்கு அடியில் பதிக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று சபையில் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

வடசென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 10-வது வட்டம், அன்னை சத்தியா நகர் எம்.ஜி.ஆர். நகர் பகுதிகளில் 33 கி.வோ. உயர் அழுத்த மின்கம்பி (ஓ.எச்) தரைக்கு மேல் செல்கிறது. இப்பகுதிகள் வழியாக தண்டையார்பேட்டை, (230 கி.வோ.) துணை மின் நிலையத்திலிருந்து கண்ணதாசன் நகர் துணை மின் நிலையத்திற்கு வெகு காலத்திற்கு முன்பாகவே வீடுகள் ஏதும் இல்லாத நிலம் வழியாக

[திரு. இரா. விசுவநாதன்] [2005 மார்ச் 22

(33 கி.வோ.) மின்கம்பி எடுத்துச் செல்லப்பட்டது. தற்போது மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, வான்வழி செல்லும் கம்பிகளைப் புதைவடமாக மாற்ற 3.47 கி.மீ. நீளத்திற்கு (கேபிளாக) சுமார் ரூ.190 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை 2005–2006 நிதியாண்டில் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் ரூபாய் 190 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் செய்யப்பட்டு, 2005–2006 ஆம் நிதியாண்டிலே இந்தப் பணி மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அறிவித்தமைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற அதே வேளையில், கடந்த 26–11–2004 அன்று 2–வது வட்டம், திருவள்ளுவர் நகர் பகுதியில் உயர் மின் அழுத்த கம்பியினால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக, அந்தப் பகுதியில் ஒரு குடும்பம் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளானது. அந்தப் பகுதியில் உயர் மின் அழுத்த கம்பி வடத்தைப் புதைவட கம்பியாக மாற்றுவதற்கு ஏதேனும் திட்டம் அரசின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26–11–2004–ல் திருவள்ளுவர் நகரில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்டதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக அந்தப் பகுதியில் வான்வழி செல்லும் மின்வடக் கம்பிகளை புதைவடங்களாக மாற்றுவதற்காக உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதற்காக ரூபாய் 114 இலட்சம் ஒதுக்கீடு செய்து, அதிலே தற்போது 75 சதவிகிதப் பணிகள் முடிவடைந்திருக்கின்றன. மீதமுள்ள பணிகளும் விரைந்து முடிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி இந்த உயர் மின் அழுத்த கம்பிகள் செல்கின்ற பகுதிகள் வேறு ஒரு நகருக்கு மின்சாரம் கொண்டு செல்லப்படுவதால், அந்த நிலையில் காலியாக இருந்த அந்தப் பகுதிகள் தற்போது வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரில் குடியிருப்புகள் அதிகமாக உருவாகியுள்ளதால் அந்த உயர் மின் அழுத்தக் கம்பிகளால் அவ்வப்போது விபத்துகள் ஏற்படுகின்றன. இதை முற்றிலுமாகத் தடுக்கின்ற நோக்கத்தோடு ஒட்டுமொத்தமாக, சென்னையிலே இப்படி உயர் மின் அழுத்தக் கம்பிவடங்கள் எங்கெங்கு

2005 மார்ச் 22] [திரு. பி.கே. சேகர்பாபு]

செல்கின்றன என்பதை ஆராய்ந்து நிரந்தரமாக அந்த உயர் மின் அழுத்தக் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகரப் பகுதிகளில் எத்தனை கிலோ மீட்டர் மின் கம்பிகள் மேல் நிலையில் செல்கின்றன என்பதைக் கணக்கில் எடுத்துப் பார்க்கின்றபோது, ஏறத்தாழ சென்னைப் பெருநகரப் பகுதியில் 1172 கிலோ மீட்டர் உயர் மற்றும் தாழ்வழுத்த மேல்நிலை மின் கம்பிகள் இருந்தன. இதை மாற்றுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டதன் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் சொன்னதுபோல ஜனநெருக்கம் அதிகமாக உள்ள பகுதிகளில் வான்வழியில் செல்கின்ற மின் கம்பிகளினால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மொத்தமாக இப்போது ஆய்வு செய்து, அதிலே கண்டறியப்பட்ட 1,172 கிலோ மீட்டரில் உடனடியாக அந்தப் பெருநகரப் பகுதிகளை நீக்கி, சென்னை மாநகரப் பகுதி மட்டும், சென்னை மாநகரத்திற்குள் இருக்கிற, அந்தப் பகுதிக்குள் இருக்கிற கிலோ மீட்டர் தூரம் ஏறத்தாழ 560 கிலோ மீட்டர். சென்னை மாநகரப் பகுதி எல்லைக்கு உட்பட்ட 560 கிலோ மீட்டர் நீளம் உள்ள மின் கம்பிகள் வான்வழியில் செல்கின்றன. 560 கிலோ மீட்டர் தூரத்தையும் உடனடியாக மாற்ற வேண்டுமென்று இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி எடுக்கப்பட்ட முடிவை செயல்படுத்துகின்றபோது, 2002–2003 ஆம் ஆண்டில் ரூ. 4 கோடி செலவில் 10 கிலோ மீட்டர் நீளமுள்ள மேல்நிலைக் கம்பிகளும், 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.6 கோடி செலவில் 120 கிலோ மீட்டர் நீளமுள்ள மேல்நிலைக் கம்பிகளும், 2004–2005 ஆம் ஆண்டில், இந்த நடப்பாண்டில் ரூ.10 கோடி செலவில் 140 கிலோ மீட்டர் நீளமுள்ள மேல்நிலைக் கம்பிகளும் மாற்றப்பட்டுள்ளன. இன்னும் மாற்றப்பட வேண்டியது 290 கிலோ மீட்டர் மட்டுமே. அந்த 290 கிலோ மீட்டரையும் மாற்றுவதற்கு இப்போது மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. ரூ.12 கோடி மதிப்பீட்டில் அந்தப் பணிகளும் விரைவில் செய்து முடிக்கப்பட இருக்கின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, சென்னைப் பெருநகரில் மக்களுடைய*

பாதுகாப்பு கருதி, படிப்படியாக அனைத்து மின் கம்பிகளையும் மேல்நிலையில், வான்வழியில் செல்கின்ற அனைத்து மின் கம்பிகளையும், புதைவடங்களாக மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு துரித நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

திரு. மீ.அ. வைதியலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதில்...*

திரு. மு.பெ. சாமிநாதன்: *தலைவரவர்களே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன.*

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.*

திரு. கே.என். இலட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து மூன்று மற்றும் இருநூற்று அறுபத்து நான்கு ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மனுக்கள் குழுவின் நூற்று ஐந்து முதல் நூற்று எட்டு வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS